

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் நாட்டின் 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு அன்னதான கூடத்தில் நடைபெற்ற சமபந்தி நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான்,ஆரணி எம்.பி. தரணிவேந்தன்,ஆகியோர் கலந்து கொண்டு சமபந்தி விருந்தினை தொடங்கி வைத்துபொதுமக்களுடன் அமர்ந்து உணவருந்தினர்.தொடர்ந்து கோவிலுக்கு வருகை தந்த பெண் பக்தர்களுக்கு கோவில் சார்பில் வழங்கப்பட்ட புடவைகளை அவர்கள் வழங்கினர். உடன் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், துரை, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், உதவி ஆணையர் சக்திவேல்,மூன்றாம் முறைஅறங்காவலர் ஏழுமலை ஆகியோர் உள்ளனர்.

### நுகர்வோர் மற்றும் மொத்த விலைக் குறியீடு பணவீக்க விகித இலக்கு மற்றும்

# சாதாரண குடிமக்கள் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

நாமக்கல் ஆக 20-

நுகர்வோர் மற்றும் மொத்த விலை குறியீடு பணவீக்க விகித இலக்கு மற்றும் சாதாரண குடிமக்கள் மீதான பண வீக்கத்தை கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ? என்

மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் எம்.பி. கேள்வி எழுப்பினார்.



டெல்லி பாராளுமன்றத்தில் மாநிலங்களவை கூட்டத்தொடரில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் கலந்து கொண்ட கடந்த மூன்று நிதி காலாண்டுகளுக்கான நுகர்வோர் விலைக் குறியீடு (CPI) மற்றும் மொத்த விலைக் குறியீடு (WPI) இரண்டாலும் அளவிடப்படும் தற்போதைய பணவீக்க விகிதம், இந்த புள்ளிவிவரங்கள் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நிர்ணயித்த இலக்கு பணவீக்க விகிதத்துடன் எவ்வாறு ஒப்பிடுகின்றன ?

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், சாதாரண குடிமக்கள் மீதான அதன் தாக்கத்தைக் குறைக்கவும், விலை நிலைத்தன்மையை அடைவதில் அவற்றின் செயல்திறன் ஆகியவற்றுடன், அரசாங்கமும் ரிசர்வ் வங்கியும், நிதி மற்றும் நிதி இரண்டாலும் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய நிதி அமைச்சக அமைச்சர் பங்கஜ் சௌத்ரி

கடந்த மூன்று காலாண்டுகளுக்கான நுகர்வோர் விலைக் குறியீடு (CPI) மற்றும் மொத்த விலைக் குறியீடு (WPI) அடிப்படையிலான சராசரி பணவீக்க விகிதம் குறித்த தகவல்கள் அறிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

1934 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கி சட்டத்தின் விதிகளின் கீழ், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அதன் முதன்மை பணவியல் கொள்கை கட்டமைப்பாக நெகிழ்வான பணவீக்க இலக்கு கொள்கையைப் பின்பற்றுகிறது, இதன் மூலம் RBI நுகர்வோர் விலைக் குறியீட்டு (CPI) பணவீக்கத்தை (தலைப்பு பணவீக்கம்) 4% இல் ±2 சதவீத புள்ளிகள் சகிப்புத்தன்மை வரம்போடு (அதாவது, இலக்கு வரம்பு 2% முதல் 6% வரை) பராமரிக்க இலக்கு வைக்கிறது. கடந்த மூன்று காலாண்டுகளாக, CPI பணவீக்க விகிதம் RBI இன் சகிப்புத்தன்மை வரம்பான 4% + 2% க்குள் உள்ளது. WPI என்பது RBI க்கு குறிப்பாக இலக்கு வைக்கப்பட்ட பணவீக்க விகிதம் அல்ல.

அதேபோல பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், பொது குடிமக்கள் மீதான அதன் தாக்கத்தைக் குறைக்கவும், நிதி மற்றும் வர்த்தகக் கொள்கை உள்ளிட்ட பல நிர்வாக நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தாங்கல் இருப்புக்களை அதிகரித்தல், திறந்த சந்தையில் கொள்முதல் செய்யப்பட்ட தானியங்களின் விற்பனை, பற்றாக்குறை காலங்களில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகளை எளிதாக்குதல் மற்றும் சந்தையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் அதிக விநியோகங்களைத் தள்ள இருப்பு வரம்புகளை செயல்படுத்துதல், பாரத் பிராண்டின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உணவுப் பொருட்களின் மானிய விலையில் சில்லறை விற்பனை, எல்லாவற்றிற்கும் மேலாக, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சுமார் 81 கோடி பயனாளிகளுக்கு இலவசமாக உணவு தானியங்களை விநியோகித்தல் மற்றும் வருமான வரியிலிருந்து ஆண்டு வருமானம் 12 லட்சம் வரை (மற்றும் சம்பளம் பெறும் தனி நபர்களுக்கு 12.75 லட்சம்) விலக்கு அளிப்பதன் மூலம் தனிநபர்களின் செலவழிப்பு வருமானத்தை அதிகரித்தல் ஆகியவை இதில் அடங்கும். இந்த முயற்சிகளை நிறைவு செய்யும் வகையில், இந்திய ரிசர்வ் வங்கியின் நாணயக் கொள்கைக் குழு மே 2022 முதல் பிப்ரவரி 2023 வரை ரெப்போ விகிதத்தை 250 அடிப்படைப் புள்ளிகள் (4% முதல் 6.5% வரை) உயர்த்தியது, அதன் பிறகு ஜனவரி 2025 வரை அதை 6.5% ஆகப் பராமரித்தது.

இதன் விளைவாக, CPI ஆல் அளவிடப்படும் சராசரி ஆண்டுக்கு ஆண்டு சில்லறை பணவீக்கம், 2023-24 இல் 5.4 சதவீதத்திலிருந்து 2024-25 இல் 4.6 சதவீதமாகக் குறைந்தது, இது ஆறு ஆண்டுகளில் மிகக் குறைவு. சமீபத்திய தரவுகளின்படி, ஜூன் 2025 இல் சில்லறை பணவீக்கம் 2.1 சதவீதமாகக் குறைந்தது. பணவீக்கத்தில் ஏற்பட்ட பரந்த அளவிலான சரிவின் விளைவாகவும் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், ரிசர்வ் வங்கி பிப்ரவரி 2025 முதல் கொள்கை (ரெப்போ) விகிதத்தில் 100 அடிப்படைப் புள்ளி குறைப்பைக் கொண்டு வந்துள்ளது. இந்த ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் நிலையான பொருளாதார வளர்ச்சியுடன் பணவீக்கக் கட்டுப்பாட்டை சமநிலைப்படுத்து வதை நோக்கமாகக் கொண்டுள்ளன என பதிலளித்தார்.

### தலைமைக் கழகப் பேச்சாளர்

# பவானி எஸ்.கண்ணன் புதுமனை புகுவிழா!

## கழகத்தினர் பங்கேற்பு

ஈரோடு, ஆக.20-

தலைமைக் கழகப் பேச்சாளர் பவானி எஸ். கண்ணன் இல்ல விழாவில் கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இது பற்றிய விவரம்:

தலைமைக் கழக பேச்சாளர் பவானி எஸ்.கண்ணன் புதுமனை புகுவிழா வருகிற 28.8.2025 வியாழக்கிழமை யன்று காலை 6 மணிக்கு கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.கஸ்டாலின், இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் பவானி மேட்டூர் மெயின் ரோடு, ஊராட்சி கோட்டை ஸ்ரீ குமரன் கார்டனில் அமைந்துள்ள கலைஞர் இல்லம் புதுமனை புகுவிழாவில் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து கட்சி பிர முகர்கள், ஆன்றோர்கள் சான்றோர்கள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை தலைமைக் கழக பேச்சாளர் எஸ்.கண்ணன் குடும்பத்தினர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சிறப்பாக செய்து வருகின்றனர்.



மதுரை மாநகர் மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி சார்பாக ஒரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் மதுரைக்கு கோ.புதூரில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா அறிவக கணினி கட்டுப்பாட்டு அறையினை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் தகவல் தொழில்நுட்ப பணி மாநிலத் துணைச் செயலாளர் சுரேஷ் செல்வராஜ் திறந்து வைத்தார். உடன் கழக மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம், தீர்மானக் குழு அக்ரி கணேசன், தகவல் தொழில்நுட்ப அணி மண்டல பொறுப்பாளர் பா.ச.பிரபு, மாநகர் மாவட்ட அமைப்பாளர் பாலகிருஷ்ணன், மாவட்ட நிர்வாகிகள் ஒச்சு பாலு, மூவேந்திரன், ராகவன், பகுதி செயலாளர்கள் புண்ணியமூர்த்தி, சரவணன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சௌந்தர்ராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் வைகை பரமன், முத்துகணேசன், ஏ.கே.ஆறுமுகம், பி.டி. மணிமாறன் கழக நிர்வாகிகள் வேலு, வி.சி.மாதவன், பொன் சேது, கருப்பு மற்றும் கழக நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணியினர், இளைஞர் அணியினர் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியம், மையனூர் ஊராட்சி, திருக்கோவிலூர் ஒன்றியம், கூவனூர் ஊராட்சிகளில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு துறை சார்ந்த பதிவு செய்யப்பட்ட கோரிக்கை மனுக்களை ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் நேற்று (19.08.2025 – செவ்வாய்க்கிழமை) பெற்றுக் கொண்டார்கள், நிகழ்வில் ஒன்றிய குழு தலைவர்கள் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், அஞ்சலாட்சி அரசகுமார், துணைத் தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை, ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள், துரைமுருகன், அய்யனார், ஒன்றிய கவுன்சிலர்கள் உஷா ஜோதிநாதன், மஞ்சுளா கணேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் ரமேஷ், அய்யனார் மற்றும் அரசு அதிகாரிகள், பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்.

### திராவிட மாடல் அரசின் திட்டங்களால் நீலகிரி மலைவாழ் மக்கள் பெருமிதம்!

# என்றும் எங்களோடு முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.இராமச்சந்திரன் அறிக்கை!

**தெ**ன்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்கள் சந்திக்கும் பகுதியான எங்கள் மலைப்பகுதியில் என்றென்றும் அங்குள்ள மலைவாழ் மக்களின் மனதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைந்து இருக்கிறார் என்றால் அது எந்த வகையிலும் மிகையல்ல. பசுமை மிகு நீல மலைகள் என்று அழைக்கப்படும் எங்கள் நீலகிரியில் மக்களின் மனதில் பசுமரத்தாணி போல் இருப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசின் சார்பில் என்னென்ன திட்டங்கள் எப்போதெல்லாம் அறிமுகம் செய்யப்படுகிறதோ, அப்போதெல்லாம் அந்தந்த திட்டங்கள் இந்த நீலகிரி மலைப் பகுதியில் உடனுக்குடன் செயலாக்கம் பெறுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். மாநிலத்திலேயே அதிக அளவில் கடும் மழை பெய்து வரும் பகுதி எங்கள் நீலகிரி மலை, அப்படிப்பட்ட நீலகிரியில் எங்கும் வெள்ளம் ஆயினும், தமிழக அரசின் தலைசிறந்த திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள் நடைபெறும் பொழுதெல்லாம் சிரமங்களை பார்க்காமல் மலைவாழ் மக்கள் நேரடியாக வந்து குவிவதை பார்க்கும் பொழுது மனதிற்கு மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது



கடந்த 28 நாட்களாக நீலகிரி மாவட்டம் முழுவதும் ‘உங்கள் ஸ்டாலின் திட்டம்’ நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் தாயுமானவர் திட்டம் என அரசின் திட்டங்கள் ஆங்காங்கே முகாமில் நடைபெறுகின்றன.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை எடுத்துக் கொண்டால் குன்னூர் ஜெயின் மண்டபம் பிக்கோள், ஜெகதலா, சோழடா மட்டம் மவுண்ட் ப்ளசென்ட் பேரெட்டி தூதர் மட்டம் அரவேணு , அரக்காடு கோடநாடு கோத்தகிரி குழித்துறை , பேட் போா்ட், அரவேணு ஆறு குறிச்சி உள்ளிட்ட இடங்கள் கோத்தகிரி நகராட்சி பால கிழவா நெடு குலா பெஸ்ட் குரூப் பார்லியர் பேட் போர்ட் பெட்டட் டீ, சுகுழா, கோத்தகிரி ஒ.எம்.சி. ஹால் பிக்கெட்டீ உள்ளிட்ட இடங்களில் 15 நாட்களாக இத் திட்டம் தொடர்பாக கூட்டம் நடைபெற்ற போது மலைவாழ் மக்கள் திரண்டு வந்து தங்களின் ஆதரவை தெரிவித்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அதேபோல் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் தொடர்பாக கோத்தகிரி, முத்தோரை, ஒக்கலிகர், மேல் பாரத் நகர், கோத்தகிரி காந்தி மைதானம், பெள்ளட்டி மட்டம் மற்றும் குண்டாட, கள்ளகோரை, தலைக்குந்தா உள்ளிட்ட இடங்களில் நிகழ்ச்சி நடைபெற்ற போதும் அதிகாரிகளை சுற்றி அத்திட்டம் தொடர்பாக கேட்க வழிந்த கூட்டம் சொல்லி மாளாது.

அது மட்டுமல்ல சமீபத்தில் தொடங்கப்பட்ட ‘தாயுமானவர் திட்டத்தை’ எடுத்துக் கொண்டால், உதகை புது மந்து , ஆனந்தகிரி, ஒ.என்.சி. மண்டபம் , வசம் பள்ளம் குன்னூர் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் திரண்ட மலைவாசி மக்களை காணும் பொழுது, இந்த அரசு திட்டங்களில் மேல் – இன்னும் சொல்லப்போனால் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் மேல் அவர்களுக்கு தான் எவ்வளவு பாசம், நேசம், பரிவு என்பதை அறிய முடிந்தது. அரசின் திட்டங்கள் அத்தனையுமே மிக மிக முக்கியமானதாக வாழ்க்கைக்கு தேவையானதாக இருக்கின்றன என்பதை அவர்களால் உணர முடிந்தது.

எங்கு நோக்கினும் மேகம் சூழ்ந்த நிலை இருக்கும் எங்கள் நீலகிரியில் இந்த அரசின் மீது தான் எவ்வளவு நம்பிக்கை. வெறும் அறிவிப்புகளை மட்டும் வெளியிடாமல் அறிவித்த அத்தனை நலன் காக்கும் திட்டங்களையும் உடனடியாக செயல்படுத்தும் அற்புதங்களையும் இந்த தமிழ்நாடு கண்டு மகிழ்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

அதுவும் மலை பிரதேசமான எங்கள் நீலகிரியில் கடுமையான மழை காலங்களிலும் அரசின் திட்டங்களை அறிந்து கொள்ள புரிந்து கொள்ள தெரிந்து கொள்ள சிரமங்களை பாராமல் தங்கள் பகுதிக்கு பக்கத்தில் நடைபெறும் திட்ட முகாம்களுக்கு விரைந்து வந்து பலன் பெற்றாக வேண்டும் என்கின்ற மலைவாழ் மக்களின் ஆர்வத்தை குறைத்துச் சொல்லிவிட முடியாது.

‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் மலைவாழ் பகுதியில் 27 இடங்களிலும் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டம் ஒன்பது இடங்களிலும் ‘தாயுமானவர் திட்டம்’ நான்கு இடங்களிலும் என மொத்தம் 40 இடங்களில் முகாம்கள் மூலம் திட்டங்கள் அறிமுகம் செய்த போது அதில் வந்து கலந்து கொண்டு பலன் அடைந்தவர்கள் ஏராளம் ஏராளம்.

இது நாள் வரை பிரச்சினைகளிலே உழன்று கொண்டிருந்த மக்கள் அதிலும் குறிப்பாக கடைக்கோடி மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில் உள்ளவர்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு விடிவு வராதா என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த நிலையில் அவர்கள் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டும் விதமாக இந்த திராவிட மாடல் அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து அந்தத் திட்டங்களை முறைப்படி செயல்படுத்தி வருவது கண்டு அவர்கள் முகத்தில் முகத்தில் தெரிகின்ற மகிழ்ச்சியை என்னவென்று சொல்வது.

ஒவ்வொரு முகாம்களிலும் அரசு அதிகாரிகளோடும் கழக முன்னணியினரோடும் சென்று கலந்து கொண்டு அவர்களுக்குத் திட்டத்தை எடுத்துரைக்கும் போது தளபதியை வாழ்த்தாத மக்களே இல்லை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

எந்த ஒரு திட்டமும் அறிவிக்கப்பட்டு அது செயல்முறைக்கு வரும்பொழுது அதனால் பலன் அடைபவர்கள் பற்றி அறியும் போது மனதுக்குள் தோன்றும் மகிழ்ச்சி தான் என்னே.

பரவலாக கடும்மழை ‘ஆங்காங்கு நிலச்சரிவு’ சாலைகளில் வெள்ளம் என நிலைமை இருக்கும் பொழுது இது போன்ற திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள் நடைபெறும் பொழுது அங்கு சிரமம் பாராமல் வந்து குவியும் மலைவாசிகளை நேரே பார்க்கும் பொழுதும் , அவர்கள் முகத்தில் தெரியும் மகிழ்ச்சியை நோக்கும் போதும் ஆகா இந்த அரசு முறையாகத்தான் எந்தவித பாகுபாடும் இன்றி எல்லோருக்கும் எல்லாம் என்கின்ற நிலையில் செயல்பட்டு வருவதை அறிய முடிகிறது.

இந்த திராவிட மாடல், ஆட்சியில் ஏற்கனவே முதல்வர் தளபதி அவர்கள் சொல்லுவார்கள், வாக்களித்தவர்களுக்காக மட்டுமல்ல; வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பார் அது எவ்வளவு உண்மை இந்த் திட்ட அறிமுகக் கூட்டங்களில் வந்து பங்கேற்று பலன் அடைபவர்கள் தி.மு.க.வினர் மட்டும் அல்ல, மாற்றுக் கட்சியினரும் வருகின்றனர்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்திற்கு அரசின் திட்டங்கள் தொடர்பாக செல்லும் பொழுது பல்வேறு சிரமங்களை அனுபவித்தாலும் அங்கு கூடும் மக்களின் முகத்தில் எழும் மலர்ச்சியை பார்க்கும் பொழுது அந்த சிரமம் எல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் பறந்து விடும். நாம் சற்று ஓய்ந்தாலும் கூட முதல்வர் அவர்கள் அவ்வப்போது தொடர்பு கொண்டு அரசின் திட்டங்கள் மக்களிடம் கொண்டு சேர்ப்பிக்கப்படுகிறதா என்று வினவும் பொழுது அவருடைய ஆர்வத்தை அறிந்து செயல்பட வேண்டி இருக்கிறது

கடந்த ஆட்சியில் ஏராளமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டன அவைகளில் பெரும்பாலான திட்டங்கள் வெறும் அறிவிப்போடு மட்டும் இருந்து விட்டன. அதனால் தான் எங்கள் மலைவாழ் மக்கள் சொல்லொனா துயருக்கு ஆளானார்கள்.

னால் இந்த தளபதி ஆட்சியிலோ அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் உடனுக்குடன் செயல்பாட்டுக்கு வருவதால் மக்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கி வழிவதை அவர்கள் பேசுவதில் இருந்தே அறிய முடிகிறது. இந்தத் திட்டங்களை எல்லாம் மனதில் கொண்டு, எங்கள் மலைவாசிகள் பேசும் பொழுது ‘என்றென்றும் எங்களுடன் மு.க.ஸ்டாலின்’ என்று பெருமிதத்துடன் கூறுவதை கேட்க முடிகிறது

உண்மையும் அதுதான். மக்களுக்கான திட்டங்கள் அறிவிக்கப்படும் பொழுது அதேசமயம் அது செயல்பாட்டிற்கு வரும் பொழுது மக்கள் மகிழ்ச்சி அடையத் தானே செய்வார்கள்.

ஜூலை 15 முதல் ஆக. 12 வரையிலான 28 நாட்கள் நடைபெற்ற திட்டங்கள் தொடர்பான முகாம்கள் தொகுப்பே இதுவாகும். அதற்கு முன்னரும் சரி பின்னரும் சரி எங்கள் நீலகிரி மாவட்ட மக்கள், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தங்கள் நெஞ்சில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்றால் அது மிகையல்ல என்று தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.இராமச்சந்திரன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி, 3 வது வார்டுக்குட்பட்ட S.S. நகர் மேற்கு பிரதான சாலை, 1 வது மற்றும் 2 வது தெருக்களில் ரூ. 27.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணி, 19 வது வார்டுக்குட்பட்ட குரூஸ் காலனி, திருவள்ளுவர் நகர் பகுதியில் ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணி மற்றும் 40வது வார்டுக்குட்பட்ட வயல் தெரு பகுதியில் ரூ. 2.26 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார தரைகற்கள் சீரமைக்கும் பணி ஆகிய பணிகளை மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, ரகுராமன், சுஜின், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், தேவி, சூ.அமல செல்வன், ச.மோனிகா, அ.அருள் சபிதா ரெக்ஸலின், ஆர்.சதாசிவன், மு.சேக்மீரான், என்.பி.துரை உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.